மாவட்ட அளவிலான அறிவியல் செயல்திட்டப் போட்டியானது தேசிய அறிவியல் இயக்கத்தின் சார்பாக இலத்தூர் பாரத் கல்வியியல் மகளிர் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி ஆறாம் வகுப்பு மாணவி மிருதுளா ஜனனி மற்றும் எட்டாம் வகுப்பு மாணவி சிவானி ஆகியோர் குழுவாக இணைந்து தக்காளியின் விலை உயர்வு என்ற தலைப்பில் செயல்திட்டம் ஒன்றை சமர்பித்து சிறப்பிடம் பிடித்து சாதனை படைத்தனர். அம்மாணவர்களுக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் பரிசாக வழங்கப்பட்டது.

மாவட்ட அளவிலான அறிவியல் செயல்திட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இயக்குனர் இராதாபிரியா, மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

## மாநில அளவிலான சதுரங்கப் போட்டி: இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவன் முதல் இடம் பிடித்து சாதனை

தென்காசி நவ.01:

மாநில அளவிலான சதுரங்கப் போட்டியானது தென்காசி மாவட்ட பொதிகை சதுரங்க கழகத்தின் சார்பாக எம்.கே.வி.கே மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவர் முகம்மது அசில் பதினேழு வயதுகுட்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்டு வெற்றி பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்தார். அம்மாணவருக்கு தென்காசி மாவட்ட பொதிகை சதுரங்க கழகத்தின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ் மற்றும் சுழற்கோப்பையானது வழங்கப்பட்டது. மாநில அளவிலான சதுரங்கப் போட்டியில் முதலிடம் பிடித்து சாதனை படைத்த மாணவரை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா, மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

## மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி சாதனை



குற்றாலம் நவ.04:

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டியானது தென்காசி இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி மாண்டிசோரி பள்ளி மாணவி. காளிபிரியா மூன்றாவது இடம்பிடித்து சாதனை படைத்தார். அவருக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரூபாய் இரண்டாயிரத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டது. மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இயக்குனர் இராதாபிரியா, மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பஞ்சாயத்து ராஜ் விழிப்புணர்வு

தினபூமி

**குற்றாலம் நவ.08:**

குற்றாலம் நவ.08 இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பஞ்சாயத்து ராஜ் கிராம சபை விழிப்புணர்வு கூட்டமானது பள்ளியின் வளாகத்தில் அமைந்துள்ள மரத்திற்கு அடியில் வைத்து பாரம்பரிய முறையில் நடைபெற்றது.

இந்த கிராம சபை விழிப்புணர்வு கூட்டத்திற்கு ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் எட்டாம் வகுப்பு மாணவன் தேவேஷ் விவசாயி போல பாரம்பரிய ஆடையினை அணிந்து வேளாண்மை தொழிலில் உள்ள பிரச்சனைகளை பற்றியும், சுற்றுபுறத்தினை தூய்மையாக வைத்திருக்கும் முறை பற்றியும் எடுத்துரைத்தான். ஆறாம் வகுப்பு மாணவி மிருதுளா ஜனனி கிராம பகுதியினை எப்படி தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் வைக்கும் முறையினை பற்றி விளக்கி கூறினார்.

கிராம சபை கூட்டத்தின் தலைவராக மாணவி காளிபிரியா கலந்து கொண்டு வேளாண்மை தொழிலை திறம்படச் செய்வதற்க்கான ஆலோசனைகளை வழங்கினார் மற்றும் சுற்றுபுறத் தூய்மையின் முக்கியத்துவத்தினை பற்றி எடுத்துரைத்தார். மாணவி சிவானி கிராமசபை கூட்டத்தின் செயலாளராக கலந்து கொண்டார். மேலும் சுற்று புறதூய்மையை பாதுகாக்கும் விதமாக மாணவ மாணவிகள் குழுவாக இணைந்து பள்ளியின் வளாகத்தை தூய்மைபடுத்தினர். இந்த கிராம சபை பஞ்சாயத்துராஜ் விழிப்புணர்வு கூட்டத்தின் மூலம் அனைத்து மாணவ மாணவிகளும் சுற்றுசூழலை பாதுகாத்து இயற்கையை போற்றுவோம் என்பதை அறிந்து கொண்டனர்.

ம்

ிய மின் மாற்றி

க்கி வைத்தார்



தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

# வட்டார அளவிலான பேச்சுப் போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி சாதனை





**குற்றாலம் நவ.11:**

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தனியார் பள்ளி மாணவ மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப் போட்டிகளானது வட்டார அளவில் தென்காசி ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. இதில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியின் ஏழாம் வகுப்பு மாணவன் கோதண்ட ராமன் கலைஞர் ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறை (திட்டங்கள்) என்ற தலைப்பிலான பேச்சுப்போட்டியில் முதலிடம் பிடித்து மாவட்ட அளவிலான பேச்சுபோட்டிக்கு தகுதி பெற்றார்.

அம்மாணவருக்கு மாவட்ட கல்வி அலுவலர் இராமசுப்பு (தனியார் பள்ளிகள்) பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயத்தை வழங்கி பாராட்டினார். வட்டார அளவிலான பேச்சு போட்டியில் வென்று மாவட்ட அளவிலான பேச்சு போட்டிக்கு தகுதி பெற்ற மாணவரை பாரத்கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இயக்குனர் இராதாபிரியா, மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தீபாவளி கொண்டாட்டம்

தினபூமி

குற்றாலம் நவ.11:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தீபாவளிப் பண்டிகை கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி ஹர்ஷிதா ஸ்ரீ நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மாணவி ஆஹிலா வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் குழுவாக இணைந்து உபயோகமற்ற காகிதங்களை மறுசுழற்சி செய்யும் விதமாக விளக்கு வடிவம் கொண்ட நமது இந்திய மக்களின் பாரம்பரிய ஆடைகளை அணிந்து ஆடை அலங்கார அணிவகுப்பினை நடத்தினர். மாணவி காளிபிரியா பாரம்பரிய நடனமான பரதநாட்டிய நடனம் ஆடினார். ஆறாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு மாணவ மாணவிகளின் உற்சாக குழு நடனமானது நடைபெற்றது. ஒன்பதாம் வகுப்பு மாணவ மாணவிகள் குழுவாக இணைந்து கிருஷ்ண பெருமான், பூமாதேவியர் நரகாசுரனை வதம் செய்த நிகழ்வினை குறு நாடகமாக நடித்து காட்டினர். சுற்றுச் சூழல் மாசு இல்லாத தீபாவளிப் பண்டிகை கொண்டாடும் முறையை பற்றி பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் குழுவாக இணைந்து மௌன நாடகம் ஒன்றினை சிறப்பாக நடித்து காட்டினர். மாணவி ஸ்ரீனிகா நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இயக்குனர் இராதாபிரியா, மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் குழந்தைகள் தின விழா



குற்றாலம் நவ.15:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் குழந்தைகள் தின விழா இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. கல்வி ஆலோசகர் உஷாரமேஷ் தலைமை தாங்கினார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மழலையர் வகுப்பு மாணவி ஸ்ரதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஆலோசகர் உஷாரமேஷ், பள்ளி முதல்வர் பாலசுந்தர், ஒருங்கிணைப்பாளர் சுமதி, மாணவி ஸ்ரதி ஆகியோர் இணைந்து நேருவின் உருவபடத்தினை திறந்து வைத்து மின்னனு ஒளிவிளக்கினை ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். ஆசிரியை தேவி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஆசிரியை ஸ்வேதா வரவேற்புரையாற்றினார். ஆசிரியைகள் சாஜாதி ஸாபிரா, பிலோமினா ஜான்சி, அபிநயா குழுவாக இணைந்து நடனமாடினர். ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகள் குழுவாக இணைந்து நேருவின் குடும்ப உறுப்பினர்கள் போல வேடமணிந்து நடித்தனர். மாணவி ஆஹிலா நேருவின் குடும்ப உறுப்பினர்களை பற்றி தொகுத்து வழங்கினார். தமிழ் ஆசிரியர் வீரபாண்டிசண்முகம் நேருவை பற்றி கவிதை வாசித்தார். நிகழ்ச்சியில் மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு ஆசிரியைகள் குழுவாக இணைந்து ஒற்றுமையே வலிமை என்பதை உணர்த்தும் விதமாக மௌன நாடகம் ஒன்றினை நடித்து காட்டினர். ஆசிரியை தமிழ் செல்வி நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இயக்குனர் இராதாபிரியா, மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் சிறப்பாக செய்திருந்தனர்.

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் வினாடி வினா போட்டிகள்

தினபூமி



குற்றாலம் நவ.21:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் கற்றலில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் விதமாக வினாடி வினா போட்டிகளானது வகுப்பு வாரியாக பல்வேறு தலைப்புகளில் நடைபெற்றது. இதில் எல்.கே.ஜி வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். எல்.கே.ஜி வகுப்பினருக்கு இயற்கையில் கிடைத்த பொருட்களின் வடிவம் மற்றும் நிறங்களை பற்றிய வினாக்களை கேட்டல், யு.கே.ஜி வகுப்பினருக்கு தேசிய சின்னங்களை பற்றிய வினாக்களை கேட்டல், முதல் மற்றும் இரண்டாம் வகுப்பினருக்கு இந்திய மாநிலம் மற்றும் தலைநகரங்களின் பெயர்களை பற்றிய வினாக்களை கேட்டல், மூன்றாம் வகுப்பினருக்கு சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களை பற்றிய வினாக்களை கேட்டல் நான்காம் வகுப்பினருக்கு பறவைகள், விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் பற்றிய வினாக்களை கேட்டல், ஐந்தாம் வகுப்பினருக்கு இந்தியாவில் கொண்டாடப்படும் பண்டிகைகளின் முக்கியத்துவம் பற்றிய வினாக்களை கேட்டல், ஆறாம் வகுப்பினருக்கு அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்பு பற்றிய வினாக்களை கேட்டல் ஏழாம் வகுப்பினருக்கு உலக நாடுகளின் தேசிய கொடிகள் பற்றிய வினாக்கள் கேட்டல், எட்டாம் வகுப்பினருக்கு சந்திராயன் - 3 பற்றிய வினாக்களானது கேட்கபட்டது. வினாடி வினாவில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாரத் கல்விக் குழுமத்தின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் கார்த்திகை தீப திருநாள் விழா



குற்றாலம், நவ.25:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் கார்த்திகை தீபத் திருநாள் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி குங்கும காயத்ரி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை தாங்கினார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் முன்னிலை வகித்தார். மாணவி ஷைனி பிரீத்தி வரவேற்புரையாற்றினார். மாணவி காளிபிரியா அண்ணாமலையார் தீப பாடலுக்கு நடனமாடினார். மாணவி ரட்சனா கார்த்திகை பண்டிகையின் சிறப்பினை பற்றி உரையாற்றினார். மாணவர் ஜீவா கார்த்திகை தீபம் குறித்து கவிதை வாசித்தார். நிகழ்ச்சியில் பன்னிரெண்டாம் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் சுமதி, பத்தாம் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் செல்வலிங்கம், கணித ஆசிரியர் சரவணன், மற்றும் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவிகள் ஆகியோர் குழுவாக இணைந்து தீபமேற்றி சொக்கப்பனை கொளுத்தினர். மாணவி ரேணுகா தேவி நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

தினபூமி

## இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் உத்தரகண்ட் தொழிலாளர்களுக்கு சிறப்பு பிரார்த்தனை வழிபாடு



குற்றாலம் நவ.28: இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் உத்தரகண்ட் மாநிலத்தில் சுரங்க விபத்தில் சிக்கி தவிக்கும் 41 தொழிலாளர்கள் நலமுடன் மீண்டு வர சிறப்பு பிரார்த்தனை வழிபாடானது காலை வழிபாட்டு கூட்டத்தில் நடைபெற்றது. மாணவி ஐஸ்வர்யா நிகழ்வை தொகுத்து வழங்கினார். மாணவி குங்கும காயத்ரி உத்தரகண்ட் சுரங்க விபத்தில் சிக்கி தவிக்கும் தொழிலாளர்களின் நிலை பற்றிய செய்தியை விரிவான முறையில் கூறினார்.

நிகழ்வில் சுரங்கத் தொழிலாளர்கள் மீண்டு வர மாணவி ராபியாஸனா குரான் வாசித்தார். மாணவன் ஆண்டோ அருள் ஜோஸ்வின் பைபிள் வாசித்தார் . அதனை தொடர்ந்து சர்வமத பிரார்த்தனை பாடலானது பாடப்பட்டது. சிறப்பு பிரார்த்தனை வழிபாடு கூட்டத்திற்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## மேலநீலிதநல்லூர் பகுதியில் வி



மேலநீலிததநல்லூர் வட்ட
வேளாண் விரிவாக்க மையத்தி
பாக வேளாண் தொழில்நுட்ப
தின் மூலமாக சிறுதானிய பயிர்
றிய தொழில்நுட்ப பயிற்சி அ
வேளாண்மை உதவி இயக்குனர்
விவசாயிகளிடையே உரையாற்
பயன்பாடு மற்றும் சத்துக்கள் ப
ளிய பயிர்களை அதிக அளவி
கொண்டார். உழவன் செயலி ட
எடுத்து கூறினார் வேளாண்மை
பேணுதலின் முக்கியத்துவம் ப
றுநராக தூண்டில்காலை தொழி

## மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி சாதனை



குற்றாலம் நவ.29: மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டியில் தென்காசி மாவட்ட சதுரங்க கழகத்தின் சார்பாக ட்ரெஸர் ஐலேண்ட் இண்டர்நேஷனல் பள்ளி செங்கோட்டையில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவர் சுரேந்தர் பொது பிரிவில் கலந்து கொண்டு மூன்றாம் இடம் பிடித்து சாதனை படைத்தார். இம்மாணவருக்கு தென்காசி மாவட்ட சதுரங்க கழகத்தின் சார்பாக ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவரை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் சென்னை மக்களுக்கு சர்வ மத பிரார்த்தனை வழிபாடு

தினபூமி



குற்றாலம் டிச.08:
இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் சென்னையில் பெய்து வரும் கனமழையால் வெள்ள பாதிப்பில் இருந்து மீண்டு மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப காலை வழிபாட்டு கூட்டத்தில் சர்வ மத கூட்டு பிரார்த்தனை வழிபாடானது நடைபெற்றது. நிகழ்வானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவர் ஜெயதர்ஷன் நிகழ்வை தொகுத்து வழங்கினார். மாணவி சிவானி மிக்ஜாம் புயல் மழை வெள்ள பாதிப்புகள் பற்றிய செய்திகளை வாசித்தார். ஆசிரியை ஷாஜாதி ஸாபிரா சென்னையின் வெள்ள பாதிப்புகளை புகைப்படங்கள் மூலம் காட்சிப்படுத்தினார். அதனை தொடர்ந்து சர்வ மத பிரார்த்தனை பாடலானது பாடப்பட்டது. ஆசிரியை மஞ்சுளா சென்னை மக்கள் வெள்ள பாதிப்பிலிருந்து இயல்பு நிலைக்கு திரும்ப சிறப்பு பிரார்த்தனை வழிபாடு கூட்டத்தை நடத்தினார். சிறப்பு பிரார்த்தனை வழிபாடு கூட்டத்திற்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பாரதியார் பிறந்த தின விழா கொண்டாட்டம்



குற்றாலம் டிச.12:
இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பாரதியார் பிறந்த தினவிழா கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி ஷைனி ப்ரீத்தி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மாணவி குங்கும காயத்ரி வரவேற்புரை யாற்றினார். மாணவி காளிபிரியா 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாரதியாரின் பாடலுக்கு நடனமாடினார். மாணவர் கோதண்ட ராமன் பாரதியார் வாழ்க்கை வரலாறு என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மாணவர் ஜீவா பாரதியார் பற்றிய கவிதையை வாசித்தார். ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு மாணவ மாணவிகள் குழுவாக இணைந்து பெண் அடிமைகள் இல்லாத நம் பாரத நாடு என்பதை உணர்த்தும் வகையில் குறு நாடகம் ஒன்றை நடித்து காட்டினர். நிகழ்ச்சியில் ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு மாணவிகள் குழுவாக இணைந்து கும்மியடி பெண்ணே கும்மியடி என்ற பாடலுக்கு சிறப்பு நடனம் ஆடினர். மாணவி சந்தியபிரியா நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வருவாய் மாவட்ட அளவிலான டேக்வாண்டோ மற்றும் சிலம்பம் போட்டிகளில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி சாதனை

தினபூமி



**குற்றாலம் டிச.13:**

வருவாய் மாவட்ட அளவிலான டேக்வாண்டோ மற்றும் சிலம்பம் போட்டிகளானது கடையநல்லூர் லயன்ஸ் மகாத்மா மெட்ரிக் பள்ளியில் வைத்து நடைபெற்றது. இதில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவ மாணவிகள் டேக்வாண்டோ போட்டியில் எட்டாம் வகுப்பு மாணவர் தேவேஷ் காளிதாஸ், ஒன்பதாம் வகுப்பு மாணவர் யுவராஜ் வர்மா, பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் சிவ பிரதீப், நித்தின் அபினேஷ், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் கோகுல சுதன், திருமலை விஷ்வா ஆகியோர் முதலிடமும், எட்டாம் வகுப்பு மாணவி சுபாஷினி, பதினொன்றாம் வகுப்பு மாணவர் செண்பக நாதன் ஆகியோர் இரண்டாம் இடமும், ஆறாம் வகுப்பு மாணவர் ஜீவா, எட்டாம் வகுப்பு மாணவர் பிரணவ், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர் ஜெய்சன் நீல், எட்டாம் வகுப்பு மாணவி ஹர்சிதாஸ்ரீ ஆகியோர் மூன்றாம் இடம் பிடித்தனர் மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர் முபின் அப்துல்லா சிலம்பம் போட்டியில் மூன்றாவது இடத்தை பெற்று சாதனை படைத்தார். மேலும் டேக்வாண்டோ போட்டியில் முதலிடம் பிடித்த மாணவர்கள் மாநில அளவிலான போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ், பதக்கங்கள் வழங்கப்பட்டது.

மாவட்ட அளவிலான டேக்வாண்டோ மற்றும் சிலம்பம் போட்டிகளில் வென்று மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்ற மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

<u>தென்காசி கீழப்புலியூரில்</u>

## ராமர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் குறித்த முன்னெடுப்பு ஆலோசனை கூட்டம்

கணகாட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# இலஞ்சி பாரத் கல்விக்குழுமத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

தினபூமி



**குற்றாலம், டிச.15:**

இலஞ்சி பாரத் கல்விக் குழுமத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர். கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், பள்ளி முதல்வர்கள் வனிதா மற்றும் பாலசுந்தர் துணை முதல்வர் கிப்சன் கிருபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாணவி ராதை ஸ்ரீவர்ஷினி, ஆதி ப்ரீத்தி ஆகியோர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். மாணவி கனிஸ்கா குழுவினர் இறைவணக்கப் பாடலைப் பாடினர். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக தென்காசி கிறிஸ்தவ இளைஞர் சபை இயக்குனர் பிச்சையா பி.டி.எச் மற்றும் கிறிஸ்தவ சபையினர் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களை கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் மற்றும் முதல்வர் வனிதா ஆகியோர் பாடலுக்கு நடனமாடினர். எட்டாம் வகுப்பு மாணவர்கள் குழுவாக இணைந்து கடவுளை நம்பினோர் கைவிடப் படமாட்டார் என்ற தத்துவத்தை உணர்த்தும் விதமாக மௌன நாடகம் ஒன்றை நடித்து காட்டினர். மாணவி ரியா குழுவினரின் பாடலானது இடம் பெற்றது. ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய நல்லெண்ணங்கள் பற்றிய நாடகத்தை நடித்து காட்டினர். நிகழ்வில் தாஜ் நிலோஃபர் குழுவினரின் உற்சாக நடனமானது இடம்பெற்றது. நிகழ்வில் காவ்யா ஸ்ரீ குழுவினர் மற்றும் மழலையர் பிரிவு மாணவர்கள் சிறப்பு பிரார்த்தனை செய்து மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார். மாணவி ஆண்டோ தானியா கிறிஸ்துமஸ் தாத்தா போல் வேடமணிந்து நடனமாடியும் இனிப்புகளை வழங்கியும் வாழ்த்துகளை தெரிவித்தார். மாணவி ஹர்சிதாஸ்ரீ மற்றும் பக்தி பிரியா ஆகியோர் நன்றி உரையாற்றினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா பள்ளி முதல்வர்கள் வனிதா பாலசுந்தர் செய்திருந்தனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் புத்தாண்டு கொண்டாட்டம்



தினபூமி

**குற்றாலம் ஜன.04:**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் புத்தாண்டு கொண்டாட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி முத்துஜனனி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் முன்னிலை வகித்தார். மாணவி ஸ்ரீனிகா வரவேற்புரையாற்றினார். மாணவி காளிபிரியா பரதநாட்டிய நடனம் ஆடினார். ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் குழுவாக இணைந்து புதுமையைப் போற்றும் வகையில் உற்சாகமாக நடனம் ஆடினர். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு தனித்தனியாக நடிப்பின் மூலம் கேள்விக்கான விடையை கண்டுபிடிக்கும் வார்த்தை விளையாட்டு போட்டிகளானது நடைபெற்றது. நிகழ்ச்சியில் கடந்த 2023 ஆம் ஆண்டின் மாணவ மாணவிகளை பற்றிய மறக்க முடியாத நிகழ்வுகளை ஆசிரியர் சரவணன், ஆசிரியைகள் தமிழ்ச்செல்வி மற்றும் பிலோமினா ஆகியோர் சிறப்பாக எடுத்துரைத்தனர். நிகழ்வில் மாணவி மிருதுளா ஜனனி, சுபிக்ஷா தேவி, சிவதர்ஷினி, காளிபிரியா ஆகியோர் புத்தாண்டு வாழ்த்து மடலை ஆலோசகர் உஷா ரமேஷ், முதல்வர் பாலசுந்தர், பன்னிரெண்டாம் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் சுமதி, ஆசிரியர் ஜேசுபால்ராஜ் ஆகியோருக்கு வழங்கி புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர். மாணவி சிவானி நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் செய்திருந்தனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் அயோத்தி ராமர் வழிபாடு



**குற்றாலம் ஜன.22:**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு காலை வழிபாட்டு கூட்டத்தில் ராம வழிபாடு நிகழ்ச்சியானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி ஷைனி ப்ரீத்தி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் மழலையர் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டனர். ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் குழுவாக இணைந்து ராமர் மற்றும் சீதையின் திருவுருவ படத்திற்கு ஸ்ரீராம் ஜெயராம் என்று எழுதிய காகிதமாலை, மற்றும் மலரினை தூவியும் சிறப்பு வழிபாடு செய்து ராமன் வில்வித்தை நிகழ்வினை பற்றி குறுநாடகம் ஒன்றையும் சிறப்பாக நடித்துக் காட்டினர். ராமன் பற்றிய "ஸ்ரீராம் ஜெயராம்" ஸ்லோகமானது ஒலிக்கப்பட்டு அதை அனைத்து மாணவ மாணவிகளும் பின்தொடர்ந்து பாடியும் ஸ்ரீராம பெருமானின் அருள் ஆசியை பெற்றனர். மாணவி அனுபாமா அயோத்தியில் நடைபெறும் கும்பாபிஷேகத்தை பற்றி எடுத்துரைத்தார். மாணவி ஷைனி ப்ரீத்தி ஸ்ரீராமர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை பற்றி சிறப்புரையாற்றினார்.

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தேசிய பெண் குழந்தைகள் தின விழா



குற்றாலம் ஜன.26:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தேசிய பெண் குழந்தைகள் தின நிகழ்ச்சியானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி மிருதுளா ஜனனி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மாணவி ஆஹிலா வரவேற்புரையாற்றினார். மாணவி சைனி ப்ரீத்தி தேசிய பெண் குழந்தைகள் தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி சிறப்புரையாற்றினார். மாணவி காளிப்பிரியா, கிருஷ்மிகா லெஷ்மி, உமாமதி, அனந்திகா திவ்யதர்ஷினி போன்ற மாணவிகள் தங்களது திறமைகளை பரதநாட்டியம், யோகாசனம், டேக்வோண்டோ, சிலம்பாட்டம் போன்ற கலைத் திறன்களின் மூலம் பெண்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். நிகழ்வில் மழலையர் பிரிவு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவிகள் குழுவாக இணைந்து மாணவர்களின் எதிர்கால லட்சிய கனவுகளான மருத்துவர், நீதிபதி, ஆசிரியர், வழக்கறிஞர், காவல்துறை உயர் அதிகாரிகள், அறிவியல் விஞ்ஞானி, பொறியாளர்கள் போல் வேடமணிந்து பேரணியாக நடந்து சென்றனர். நிகழ்வில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவிகள் குழுவாக இணைந்து சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதியில் இருந்து மீண்டு எழுந்து நல்லதொரு நிலையை அடைந்து வாழ்வில் சாதனை புரிந்த நிகழ்வினை மௌன நாடகமாக நடித்துக் காட்டினர். மாணவி ஹரிதாஸ்ரீ நன்றி உரையாற்றினார்.

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி மேல்நிலைப் பள்ளி பேச்சுப் போட்டியில் மாவட்ட அளவில் மூன்றாம் இடம் பெற்று சாதனை

தினபூமி



குற்றாலம் ஜன.26:

தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, தென்காசி மாவட்டம் - பள்ளிக் கல்வித் துறை,பேட்டி பச்சோ பேட்டி பதோ திட்டம் இணைந்து பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு போட்டியை, தென்காசி ஈஸ்வரன் பிள்ளை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடத்தியது. போட்டிக்கு பல பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.இதில் பாரத் மாண்டிசோரி மேல்நிலைப் பள்ளி மாணவி காளிப்பரியா பேச்சுப் போட்டியில் மாவட்ட அளவில் மூன்றாமிடம் பெற்று சாதனைப் படைத்தார். வெற்றி பெற்ற மாணவி காளிப்பரியாவை தென்காசி ஆட்சித்தலைவர் துரை . ரவிச்சந்திரன் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கிப் பாராட்டினார். பேச்சுப் போட்டியில் மாவட்ட அளவில் மூன்றாம் இடம் பெற்ற காளிபிரியாவை பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் , செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷார் ரமேஷ் . முதல்வர் பாலசுந்தர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

## இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவர்கள் கலை திருவிழாவில் சாதனை



குற்றாலம் ஜன.28:

சங்கரன்கோவில் வையாபுரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான கலைத் திருவிழா நடைபெற்றது. இதில் பங்கு பெற்ற ஏழாம் வகுப்பு மாணவன் கோதண்டராமன் சிலம்பத்திலும், இரண்டாம் வகுப்பு மாணவன் பாலசேஷன் கதை சொல்லுதல் போட்டியிலும் பங்கு பெற்று வாய்ஸ் ஆப் தென்காசி நிறுவனத்தின் நிறுவனர் ஆனந்தன் தலைமையில் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசினை பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களை பாரத் கல்வி குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இயக்குனர் ராதா பிரியா மற்றும் பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

தினபூமி

## இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் குடியரசு தின விழா

தினபூமி



குற்றாலம் ஜன.28:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் குடியரசு தினப் போட்டிகளானது மாணவ, மாணவிகளின் திறமைகளை ஊக்குவிக்கும் விதமாக வகுப்பு வாரியாக பல்வேறு போட்டிகளானது நடைபெற்றது.

இதில் எல்.கே.ஜி மற்றும் யு.கே.ஜி பிரிவினருக்கு நாட்டுப்பண், தேசிய கொடியை பற்றி ஒப்புவித்தல் போட்டியும், ஒன்றாம் வகுப்பினருக்கு நேருவின் உருவ படத்திற்கு வண்ணம் தீட்டுதல் போட்டியும், இரண்டாம் வகுப்பினருக்கு பாரதியார் பற்றிய பாடல் ஒப்புவித்தல் போட்டியும், மூன்றாம் வகுப்பினருக்கு 1950 ல் இந்திய அமைச்சரவையில் இடம் பெற்ற அமைச்சர்களின் மாறுவேட போட்டியும், நான்காம் வகுப்பினருக்கு பருப்பு வகைகளை கொண்டு தேசிய சின்னத்தின் மீது ஒட்டுதல், ஐந்தாம் வகுப்பினருக்கு காகிதங்களை கொண்டு தேசிய கொடியினை வடிவமைத்தல் போட்டியும், ஆறாம் வகுப்பினருக்கு நம் தேசம் பற்றிய ஸ்லோகன் எழுதுதல் போட்டியும், ஏழாம் வகுப்பினருக்கு வாசித்தல் போட்டியும், எட்டாம் வகுப்பினருக்கு அம்பேத்கர் உருவபடத்தினை வரையும் ஓவியம் போட்டியும் ஒன்பதாம் வகுப்பினருக்கு வினாடி வினா போட்டிகள் போன்ற பல போட்டிகள் நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும், காலை வழிபாட்டுக் கூட்டத்தில் குடியரசு தினப் போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வில் மாணவர்கள் அனைவரும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

ல்நிலைப்பள்ளியில்

ரசு தின விழா

இயாக நாட்டுப்பண் வாசித்து இனிப்புகள் வழங்கப்பட்டன. அனைத்து துறை ஆசிரியர், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பிரிவு உபசார விழா



குற்றாலம் பிப்.04:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு பிரிவு உபசார விழாவானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், ஆகியோர் தலைமை வகித்தனர். கல்வி ஆலோசகர் உஷாரமேஷ், பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பாரத் கல்விக் குழுமத்தில் படித்து சாதனை படைத்த முன்னாள் மாணவியும் சித்த மருத்துவ ஆலோசகருமான டாக்டர். சத்யபிரியங்கா கலந்து கொண்டார். நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி ராபியாலைனா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மாணவிகள் மரியம், ஹரிணி ஆகியோர் பாரத் கல்விக் குழுமத்தின் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணனுடன் இணைந்து சிறப்பு விருந்தினருக்கு பூங்கொத்து, பரிசினை கொடுத்து வரவேற்றனர். மாணவி முகையதீன் பாத்திமா வரவேற்புரையாற்றினார். மாணவி காவ்யபிரியா வரவேற்பு நடனமாடினார். நிகழ்வில் SPRADA - 2 வாழ்த்து மடலை பாரத் கல்விக் குழுமத்தின் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் வெளியிட்டார். பதினொன்றாம் வகுப்பு மாணவிகள் குழுவாக இணைந்து வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை பற்றி வாழ்க்கை மரம் என்னும் தலைப்பில் எடுத்துரைத்தனர். மாணவி சிவதர்ஷினி தனிநடனம் நடனமாடினார். மாணவி ஹரிணி வகுப்பில் நடந்த மறக்க முடியாத நினைவுகளை பற்றி கூறினார். நிகழ்வில் அனைத்து மாணவ மாணவிகளும் மனதிற்கு இதந்தரும் பாடலினை காணொலியில் ஒலிக்க செய்து பாடலில் விடுபட்ட வார்த்தையை கண்டுபிடித்து வார்த்தை விளையாட்டாக விளையாடி மகிழ்ந்தனர். நிகழ்வில் நடப்பு கல்வியாண்டில் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு தனித்திறன்களுக்கு ஏற்ப விருதுகளானது வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் பொதுத் தேர்வினை எழுதும் மாணவ மாணவிகளுக்கு காலத்தின் முக்கியத்துவம் பற்றியும் தேர்வினை மனஅமைதி, தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளும் ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்வில் பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து வாழ்வில் வெற்றி பெற்ற சாதனையாளர்களான அப்துல்கலாம், பாரதியார், டாக்டர் ராதாகிருஷ்ணன், சச்சின், எம்.எஸ்.சுப்புலெட்சுமி, அன்னை தெரசா ஆகியோரின் உருவப்படம் பொறித்த முககவசத்தினை அணிந்த மாணவர்களின் கைகளில் தீப ஒளி மின்விளக்கினை கொடுத்து தீப ஒளியின் பிரகாசத்தை போல நீங்களும் வாழ்வில் ஒளிர வேண்டுமென வாழ்த்தி புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷாரமேஷ், இயக்குனர் இராதா பிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தினபூமி 5

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் அறிவியல் வார செயல்பாடு

தினபூமி

குற்றாலம் பிப்.18:



இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் அறிவியல் வார செயல்பாடுகளானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் நான்காம் வகுப்பு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களை பந்துகளில் மூலம் வடிவமைத்தனர். மண் வகைகள் பற்றி விளக்கம் அளித்தனர். சந்திரனின் வடிவங்களை செயல்திட்டம் மூலம் எடுத்துரைத்தனர். சிறுநீரக மண்டல அமைப்பு பற்றிய பரிசோதனை செய்தனர். சரிவிகித உணவு பற்றி விளக்கம் அளித்தனர். அழிந்து வரும் சிட்டுக்குருவி இனத்தை மீட்டெடுக்கும் விதமாகவும், நெகிழி பொருள் ஒழிப்பு பற்றிய வாசகங்களை எழுதி விழிப்புணர்வு பேரணியாக சென்றனர். நீர் சுத்திகரிப்பு முறை பற்றி பரிசோதனை செய்தனர். வீடுகளின் வகைகள் பற்றிய மாதிரி உருவங்களை காட்சிப்படுத்தினர். சிறப்பாக அறிவியல் செயல் திட்டங்களை செய்து காட்டிய மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதா பிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

5

# ஆங்கில திறன் அறிதல் போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி சாதனை



குற்றாலம் பிப்.23:

பள்ளி மாணவர்களுக்கு இடையிலான ஆங்கில திறன் அறிதல் போட்டியை சென்னை ஷேக்ஸ்பியர் இன்ஸ்டிடியூட் நடத்தியது. இதில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பயிலும் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் ஆறாம் வகுப்பு மற்றும் ஏழாம் வகுப்பில் பயிலும் ஸ்ரீராம், ராகுல், மிருதுளா ஜனனி, அஸ்கதி, உமாமதி, கபிக்க்ஷாதேவி, அருணாலோஷினி, எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளில் பயிலும் தேவேஷ் காளிதாஸ், சஃப்வான் பரக்கத்துல்லா, நரேன், கார்த்திக் விஷ்னு, க்ஷைனிப்ரித்தி, அனுபமா ஆகியோர் வட்டார அளவிலான போட்டியில் வென்றனர். மேலும் பள்ளிக்கு பெரும்மிகு உறுதுணை விருது, கேடயம் மற்றும் தங்கப்பதக்கமானது வழங்கப்பட்டது. ஆங்கில திறன் அறிதல் போட்டியில் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், ஆலோசகர் உஷாரமேஷ், இயக்குனர் இராதா பிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் பாராட்டினர்.

Printed, Published and
Owned by S.Manimaran
and Printed at
Manimaran Printers
11/78, Fourway Main Road,
Gangaikondan,
Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தினபூமி

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளிக்கு நெகிழி பொருள் பயன்பாட்டு ஒழிப்பு விழிப்புணர்வுக்கான சவால் விருது

குற்றாலம் பிப்.24:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளிக்கு நெகிழி பொருள் பயன்பாட்டு ஒழிப்பு விழிப்புணர்வுக்கான சவால் விருதானது வழங்கப்பட்டது. நடப்பு கல்வி ஆண்டான 2023-24 ஆம் கல்வியாண்டில் நெகிழிப் பொருள் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்கும் விதமாகவும் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளியானது தொடங்கியது. இதனை செயல்படுத்தும் விதமாக பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கு மஞ்சப்பை வழங்கி ஊக்குவித்தனர். இயற்கையை அழிவிலிருந்து மீட்டெடுத்து பசுமையை போற்றும் விதமாக மாணவர்கள் அனைவரும் பசுமை புரட்சி திட்டத்தை செயல்பாடுகளாக காட்சிப்படுத்தினர். மாணவர்கள் தங்களது திறன்களை பல்வேறு வகையான மரம், செடி, கொடிகளை விளக்க வரைபடங்களின் மூலம் வரைந்து செயல் திட்டமாக செய்து காட்டினர். இதனால் மாணவர்களிடையே இயற்கையை நேசிக்கும் எண்ணமானது மேலோங்கியது. இயற்கையை பாதுகாப்பது பற்றிய உறுதிமொழியையும் எடுத்து கொண்டனர். பசுமையான மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டினை தவிர்த்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள், போட்டிகளானது நடைபெற்று வருகிறது.




**பாராட்டு**

இத்தகைய நிகழ்வுகளை பாராட்டும் விதமாக மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை அமைச்சகத் துறையின் சார்பில் பாரத் மாண்டிசோரி பள்ளிக்கு நெகிழி பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக்கான சவால் விருதினை பாரத் கல்விக் குழுமத்தின் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணனுக்கு வழங்கி சிறப்பித்தது. இவ்விருதினை பெற்ற பாரத் கல்விக் குழுமத்தின் செயலாளரை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன் பாராட்டினார்.

தினபூமி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தேசிய அறிவியல் தினம் கொண்டாட்டம்



குற்றாலம் மார்ச்.01:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தேசிய அறிவியல் தினம் கொண்டாட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி ஷைனி ப்ரீத்தி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக இயற்பியல் துறையை சார்ந்த பள்ளி ஆசிரியை ஸ்வேதா கலந்து கொண்டார். அவருக்கு கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் நினைவு பரிசினை வழங்கினார். மாணவி ஸ்ரீனிகா வரவேற்புரையாற்றினார். மாணவி காளி பிரியா பரத நாட்டியம் ஆடினார். மாணவி சிவானி அறிவியல் அறிஞரான சர்.சிவி.இராமன் வாழ்க்கை வரலாற்றை பற்றி உரையாற்றினார். மாணவன் கோதண்டராமன் சர்.சிவி.இராமனின் அறிவியல் கண்டுபிடிப்புகளை பற்றி எடுத்துரைத்தார். மாணவிகள் சிவதர்ஷனி, ஜனுல் இனயா ஆகியோர் குழுவாக இணைந்து கைரேகையின் வகைபாடுகள் பற்றிய செயல் திட்ட அறிக்கையினை காட்சிப்படுத்தினர். மாணவி கிருஷ்மிகா தக்காளி பழத்தில் இருந்து மரபணுவை பிரித்தெடுக்கும் முறை பற்றி காட்சிப்படுத்தினர். நிகழ்வில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் குழுவாக இணைந்து சர்.சிவி.இராமன் போல் வேடமணிந்து பேரணியாக சென்றனர். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியை ஸ்வேதா மாணவர்களிடையே அறிவியலின் முக்கியத்துவம் மற்றும் சர்.சிவி.இராமனின் வாழ்க்கை வரலாற்றை பற்றி உரையாற்றினார். மாணவி சந்தியபிரியா நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதா பிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் செய்திருந்தனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாட்டம்



குற்றாலம்.மார்ச்.09-

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாட்டமானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி முத்து ஜனனி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக தென்காசியை சேர்ந்த ஆதரவற்ற பெண்மணி ஹாஜாரா கலந்து கொண்டார். அவருக்கு கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் அன்றாட வாழ்வுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். மாணவி ஷைனி பிரீத்தி வரவேற்புரையாற்றினார். மாணவி காளிபிரியா பெண்களை பெருமைபடுத்திய பாடலுக்கு பரதநாட்டியம் ஆடினார். மாணவர்கள் ஜீவா மற்றும் சிவன் ஆகியோர் மகளிர் தினத்தின் சிறப்பு கவிதைகளை வாசித்தனர். நிகழ்வில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவிகள் குழுவாக இணைந்து பல்வேறு துறைகளில் பணிபுரிந்து சாதனை படைத்த பெண்மணிகள் போல் வேடமணிந்து பேரணியாகச் சென்றனர். நிகழ்வில் மகளிர் தினத்தை போற்றும் விதமாக ஒவ்வொரு ஆசிரியைகளுக்கும் மாணவிகள் குழுவாக இணைந்து பள்ளியின் சார்பாக பரிசினை வழங்கினர். ஆசிரியைகள் அனைவரும் இணைந்து கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் அவர்களுக்கு நினைவு பரிசினை வழங்கினர். மாணவி ஸ்ரீனிகா மகளிர் தினத்தின் முக்கியத்துவம் பற்றி சிறப்பாக உரையாற்றினார். பள்ளியில் பணிபுரியும் பெண் தூய்மை பணியாளர்களுக்கு பள்ளியின் சார்பாக பன்னிரெண்டாம் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஆசிரியை கமதி அவர்கள் பரிசினை வழங்கினார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர் மாணவர்கள் எதிர் காலத்தில் கல்வியில் சாதனை படைத்து உயர் பதவிகளில் பணிபுரிய வேண்டுமென தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். மாணவி சிவரஞ்சனி நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி
க.பெருமாள், தகப். கருப்பணன், கதவு 164/2, வடக்குதெரு,
[illegible]
-மனுதாரர்
எதிர்
[illegible]
-எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
[illegible] 16.05.1984 [illegible] 15 [illegible]

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி
க.பெருமாள், தகப். கருப்பணன், கதவு 164/2, வடக்குதெரு,
[illegible]
-மனுதாரர்
எதிர்
[illegible]
-எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
[illegible] 16.05.1984 [illegible] 15 [illegible]

தினபூமி

# பள்ளி குழந்தைகளுக்கான மாறுவேட போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி சாதனை



குற்றாலம் மார்ச்.14:

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்த நாளை முன்னிட்டு குருதேவருக்கும் ஏனைய மெய் அடியார்களுக்கும் அஞ்சலி செலுத்தும் விதமாக பள்ளி குழந்தைகளுக்கான மாறுவேட போட்டியானது கூகுள் மூலம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் எல்.கே.ஜி வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

நமது தேசத்தில் பல்வேறு இடங்களில் தோன்றி மக்களுக்கு வழிகாட்டிய மகான்களான ஆதிசங்கரர், ராமானுஜர், மத்வர், சைதன்யர், ரமண மகரிஷி, ஞானானந்தகிரி, விவேகானந்தர், குருநானக், நாராயண குரு, இராமலிங்க அடிகள், ஸ்ரீரடி சாய்பாபா, ஆண்டாள், அன்னை வேளாங்கண்ணி, ஜனாபாய், அக்கா மகாதேவி, கபீர்தாஸ், திருவள்ளுவர், சாரதா தேவி, ஔவையார், காரைக்கால் அம்மையார், அன்னை தெரசா, மேரி மாதா, துளசி தாஸ் ஆகியோர் போல் மாறுவேடமணிந்தனர். இதில் சிறப்பாக மாறுவேடமணிந்து திறமைகளை வெளிப்படுத்திய நம் பள்ளியின் அனைத்து மாணவ மாணவிகளையும் குருதேவர் பாராட்டினார். மாறுவேட போட்டியில் கலந்து கொண்டு பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி
து. சகாயராஜ், த/பெ. துரைராஜ், கதவு எண்: 2A, போல்டன்புரம், தூத்துக்குடி. மனுதார்
எதிர்
வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம், சார்பதிவாளர், ஓட்டப்பிடாரம். எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது தாயார் சிவகாமியம்மாள் க/பெ. துரைராஜ் என்பவர் கடந்த 28.12.1999 அன்று அவர் குடியிருந்த ஊரான கச்சேரிதளவாய்புரம் கிராமம், ஓட்டப்பிடாரம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவி

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் அறிவியல் கண்காட்சி செயல் திட்டத்திற்கான பரிசளிப்பு விழா



குற்றாலம் மார்ச்.21:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் அறிவியல் கண்காட்சியில் சிறப்பாக செயல் திட்டங்களை வடிவமைத்த மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு நிகழ்வானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் காகிதங்களை கொண்டு படகினை வடிவமைத்த மாணவி ஸ்ரதி, ஸ்டிக்கிஜல் செயல்திட்டத்தை வடிவமைத்த மாணவி மனிஷா, சரிவிகித உணவு முறை செயல்திட்டத்தை வடிவமைத்த மாணவிகள் தஜ்ரின் பாத்திமா, இவிப், உணவில் கிருமிகள் பரவுவதை தடுக்கும் வண்ணம் பற்றிய செயல் திட்டத்தை வடிவமைத்த மாணவிகள் அனியா பேகம், ஆர்டுஇனோ சென்சார் செயல்திட்டத்தை வடிவமைத்த மாணவன் ஸ்ரீ ஹரி ராஜ், ஹாலோ கிராம் 3D செயல்திட்டத்தை வடிவமைத்த தேவேஷ் காளிதாசன் மற்றும் விஷ்ணு ஆகியோருக்கு முதல் பரிசானது வழங்கப்பட்டது.

வகுப்புகள் வாரியாக சிறப்பாக செயல்திட்டங்களை வடிவமைத்த மாணவ மாணவிகளுக்கு சிறந்த கண்காட்சிக்கான விருதுகளானது வழங்கப்பட்டது. இதில் தமிழ் ஆசிரியை மஞ்சுளாவுக்கு கைவினை பொருட்களை கொண்டு மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சி வழங்கியதால் சிறந்த கண்காட்சிக்கான விருதானது வழங்கப்பட்டது.

ஒட்டு மொத்த செயல் திட்டத்திற்கான சிறந்த விருதினை ஹாலோகிராம் 3D செயல்திட்டத்திற்கு மாணவர்கள் தேவேஷ் காளிதாசன், விஷ்ணு மற்றும் சிறப்பாக பயிற்சி வழங்கிய கணித ஆசிரியர்கள் செல்வவிங்கம் மற்றும் சரவணன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

அறிவியல் கண்காட்சியில் பங்கேற்று சிறப்பாக செயல்திட்டங்களை வடிவமைத்து வெற்றி பெற்ற மாணவ மாணவிகளையும், சிறப்பாக பயிற்சி வழங்கிய ஆசிரியர்களையும் பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

## பள்ளி குழந்தைகளுக்கான மாறுவேட போட்டி: இலஞ்சி பாரத் மாண்டிசோரி சாதனை



குற்றாலம் மார்ச்.23:

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்த நாளை முன்னிட்டு குருதேவருக்கும் ஏனைய மெய் அடியார்களுக்கும் அஞ்சலி செலுத்தும் விதமாக பள்ளி குழந்தைகளுக்கான மாறுவேட போட்டியானது கூகுள் மூலம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் எல்.கே.ஜி வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். நமது தேசத்தில் பல்வேறு இடங்களில் தோன்றி மக்களுக்கு வழிகாட்டிய மகான்களான ஆதிசங்கரர், ராமானுஜர், மத்வர், சைதன்யர், ரமண மகரிஷி, ஞானானந்தகிரி, விவேகானந்தர், குருநானக், நாராயண குரு, இராமலிங்க அடிகள், சீரடி சாய்பாபா, ஆண்டாள், அன்னை வேளாங்கண்ணி, ஜனாபாய், அக்கா மகாதேவி, கபீர்தாஸ், திருவள்ளுவர், சாரதா தேவி, ஔவையார், காரைக்கால் அம்மையார், அன்னை தெரசா, மேரி மாதா, துளசி தாஸ் ஆகியோர் போல் மாறுவேடமணிந்து திறமைகளை வெளிப்படுத்திய 23 மாணவ மாணவிகளுக்கு குரு தேவர் பாராட்டி புத்தகங்களை பரிசாக வழங்கினார் . மாறுவேட போட்டியில் கலந்து கொண்டு பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

## இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் பட்டமளிப்பு விழா

குற்றாலம் மார்ச்.24:

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் யு.கே.ஜி மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழாவானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி முதல்வர் வனிதா கலந்து கொண்டார். கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை தாங்கினார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் முன்னிலை வகித்தார். மாணவி ஹர்ஷிதாஸ்ரீ நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். கல்வி ஆலோசகர் உஷாரமேஷ் சிறப்பு விருந்தினர்க்கு பூங்கொத்து மற்றும் நினைவு பரிசினை வழங்கி வரவேற்றார். மாணவி மிருதுளா ஜனனி வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் 2023-2024 கல்வி ஆண்டிற்கான மழலையர் பிரிவு மாணவர்களின் சிறப்பு படைப்பாற்றல் அடங்கிய இதழினை சிறப்பு விருந்தினர் முதல்வர் வனிதா வெளியிட்டு விழாவை தொடங்கி வைத்தார். ஆசிரியை பிலோமினா ஆண்டறிக்கையை காணொளி காட்சி மூலம் எடுத்துரைத்தார். யு.கே.ஜி மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் கல்வியாண்டு முழுவதும் நிகழ்த்திய வகுப்பறை கற்றல் செயல்பாடுகள் மற்றும் சாதனை நிகழ்வுகளானது காணொளி காட்சி மூலம் எடுத்துரைக்கப்பட்டது. நான்காம் வகுப்பு மாணவர்கள் குழுவாக இணைந்து வனவிலங்குகள் போல் வேடமணிந்து ஒற்றுமையே வலிமை என்பதை உணர்த்தும் விதமாக ஆங்கிலத்தில் குறு நாடகம் ஒன்றினை நடித்து காட்டினர்.

மழலையர் பிரிவு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் குழுவாக இணைந்து கனவு நாயகன் அப்துல் கலாம் பாடலுக்கு நடனமாடினர். கே.ஜி மாணவர்கள் தேவதைகள் போல் வேடமணிந்து கற்பனை கதைகளை பற்றி எடுத்துரைத்தனர். விழாவில் நடந்த சிறப்பு நேர்காணலில் மழலையர் பிரிவு மாணவி ஸ்ரத்தி மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவி அனியாபேகம் ஆகியோர் எழுப்பிய பல்வேறு வினாக்களுக்கு சிறப்பு விருந்தினர் பதிலளித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர் 2023-2024 கல்வியாண்டில் வகுப்பறை கற்றல் செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய யு.கே.ஜி மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ், பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றி மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கியும் வாழ்த்துக்களை தெரிவித்தார். மாணவி சந்தியபிரியா நன்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதா பிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி
மாரிச்செல்வம்,
கனம்: 15/184, நடராஜபுரம்
கிழக்கு 6வதுதெரு,
கோவில்பட்டி, கோவில்பட்டி
தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்
எதிர்
...ட்டாட்சியர், கோவில்பட்டி.
ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது மகள் ஐஸ்வர்யலட்சுமி என்பவள் கடந்த 13.12.2020. அ...

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம்

தினபூமி



குற்றாலம் ஏப்.14-

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி செல்வ நேத்ரா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் முன்னிலை வகித்தார். மாணவி மிருதுளா ஜனனி வரவேற்புரையாற்றினார். மாணவி காளிபிரியா தமிழ் புத்தாண்டு பற்றிய சிறப்புரை ஒன்றை எடுத்துரைத்தார். ஆறாம் வகுப்பு மாணவிகள் குழுவாக இணைந்து தமிழர் பண்பாடு பற்றிய பாடலை பாடினார். தமிழ் புத்தாண்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. மேலும் தமிழ் பாரம்பரிய உணவுகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அளித்து உபசரித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் செய்திருந்தனர்.




A B C
PLAY
LEARN
AND
GROW
TOGETHER